# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஜுன் 2018

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **ஆகஸ்ட் 10, 2018**

வெளியிடப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) பெறுமதிகளுக்கமைய, 2017 ஆம் ஆண்டின் ஜுன் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 2018 ஜுன் மாதத்திற்கான உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் 0.4% இனால் அதிகரித்துள்ளதென திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ஐ.ஆர். பண்டார இந்தச் சுட்டெண்னை வெளியீடு செய்யும் உத்தியோகபூர்வ வெளியீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 ஜுன் மற்றும் 2017 ஜுன் மாதங்களில் முறையே 104.8 மற்றும் 104.4 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் அரசினைப் போன்று கைத்தொழில் நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கமைய குறிப்பிட்ட காலப்பகுதிக்கமைவாக தரப்பட்ட காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையின் தன்மையினை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மூலம் அடையாளம் காணமுடியும்.

2017 ஜுன் மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2018 ஜுன் மாதத்திற்கான “கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்”, “வடிவமைக்கப்பட்ட (Fabricated) உலோக உற்பத்திகள்” மற்றும் “துணி வகை உற்பத்தி”, என்பனவற்றில் முறையே 33.7%, 19.1% மற்றும் 15.6% என குறிப்பிடக்கூடிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது. 2018 ஜுன் மாதத்திற்கான உணவு உற்பத்தியானது 0.8% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஜுன் - 2017 | 104.4 |
| ஜுன் - 2018 | 104.8 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) 0.4 | |
| | |
| 2018, 2ஆம் காலாண்டு – 102.7 | |

கைத்தொழில் துறையில் உள்ளடங்கும் “கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்”, “மின் உபகரண உற்பத்திகள்” மற்றும் “அடிப்படை மருந்துப்பொருள் மற்றும் மருந்தாக்கல் உபகரணங்கள்” என்பன 2017 ஜுன் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் முறையே 27.4%, 24.0% மற்றும் 18.1% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 2ம் காலாண்டில் கைத்தொழிற் துறையில் ஒப்பீட்டு ரீதியில் 0.6% அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

2018 ஆண்டின் ஜுன் மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.